
# மெய்யியல் நோக்கு

## PHILOSOPHICAL JOURNAL

### மனிதனின் முழுமை



உண்மையை அறிந்துணர

**மனிதனின் முழுமை**
**கணிப்பிற்கு உட்படுமா?**
**பகுப்புகள்**
**பலப்பல**
**தொகுப்புகள்**
**கூட்டிணைப்பில்**
**எய்தப்படும்**
**மனிதனின் முழுமை**

விழி: 04 பார்வை: 01 ஐப்பசி, 2003

# உள்ளடக்கம்


1) **இருப்பின் இருப்பிடம்**

அ. ஜெ. அ. ஜெயறஞ்சன் (Under Graduate)

**You Are, Because He is**

A. J. A. Jeyaranjan (Under Graduate)

2) **நவீனயுகமும் இறைமறுப்புக் கொள்கையும்**

அ. அன்ரன் ஸ்ரீபன் B.Ph. (Rome)

**The Modern World and the Denial of God**

A. Anton Stephen, B.Ph. (Rome)

3) **சாங்கிய மெய்யியலில் - யதார்த்தம்**

பி. தே. யூட்தாஸ் B.Ph. (Rome)

**Reality According to Sankhya Philosophy**

F. T. Judethas, B.Ph. (Rome)

4) **மௌனம் தேடி**

சூ. டக்ளஸ் மில்ரன் லோகு

5) **இஸ்லாமிய மறை மெய்ஞானத்தில் இறை அனுபவம்**

கை. பீ. கனிசியஸ் றாஜ் B. Ph. (Rome)

**God Experience in Sufism**

G. F. Canisius Raj, B. Ph. (Rome)

6) **றேனே டெக்காட் (1596 - 1650)**

ஆ. மைக் மயூரன் (இளங்கலை மாணவன்)

**Rene Descartes (1596-1650)**

A. Mac Mayooran (Under Graduate)

# மெய்யியல் நோக்கு

**A PHILOSOPHICAL JOURNAL**
(வருடம் இருமுறை)
(Bi – annual)

**விழி: 04** **பார்வை: 01** **ஐப்பசி, 2003**

**Publishers:**
Faculty of Philosophy
Xavier'Seminary
Columbuthurai
Jaffna
Sri Lanka.

வெளியீடு:
மெய்யியல் துறை
சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்
இலங்கை.

"உண்மையை அறிந்துணர"

கல்வியாண்டு
**Academic Year** } 2003 - 2004

பருவம்
**Semester** } 01

ஐப்பசி - மாசி
October – February
**2003 - 2004**

தொகுப்பாசிரியரிடமிருந்து...

# கடவுள் பற்றிய உரையாடல்கள்

கடவுள் என்பவர் யார்? "கடவுள் இருக்கின்றானா? மனிதன் கேட்கின்றான். அவன் இருந்தால் உலகத்திலே எங்கே வாழ்கிறான்?". இது கடவுள் பற்றி ஒரு கவிஞனுக்கெழுந்த ஆதங்கமாகும். ஒவ்வொரு தடவையும் மனித வார்த்தைகளில் கடவுளைப் பற்றி, அவர் இருந்தால் அவரது செயற்பாடுகள் பற்றி பேச, உரையாட முற்படும் போது நமது இயலாத்தன்மையை உணர்கின்றோம். மனித வார்த்தைகள் கடவுளைப் பற்றி முழுமையாக வெளிப்படுத்தவும் தகுதியற்றவை. அதேவேளை மறுக்கவும் தகுதியற்றவை. ஏனென்றால் கடவுள் என்ற 'பாடுபொருள்' (கடவுள் என்ற ஒருவர் இருக்கலாம் அல்லது இல்லாமல் இருக்கலாம்) மனித புரிதல்களுக்கு அப்பாற்பட்டது. கடவுள் பற்றி நாங்கள் எடுத்துரைப்பவைகள் அல்லது உரையாடுபவைகள் கடவுளின் இருப்பை உறுதிப்படுத்துபவைகளாகவோ அல்லது நிராகரிப்பவைகளாகவோ இருக்கலாம். இவைகள் எப்பொழுதும் அதிக பிரசங்கித்தனமானவைகள் அல்லது மிகச் சொற்பமானவைகள்; இவைகள் அதிக பிரசங்கித்தனமானவைகள், ஏனென்றால் மனித புரிதல்களுக்கு அப்பாற்பட்ட தெய்வீகத்தை மனித வார்த்தைகளில் தெளிவாக வடிக்கமுடியாது. இவைகள் மிகச் சொற்பமானவைகள். ஏனென்றால் கடவுள் என்ற தெய்வீகப் பொருள் அனைத்தையும் கடந்து வியாபித்துள்ளது.

கடவுள் பற்றிய மனித உரையாடல்கள் அவரை வரையறுப்பதற்கோ அல்லது விளக்குவதற்கோ தகுதியற்றவைகளாகவோ அல்லது சொற்பமானவைகளாகவோ இருக்கலாம். அதேவேளை கடவுளை வரையறுக்க அல்லது விளக்க எடுக்கும் மனித முயற்சிகள் முற்றுமுழுதாக வெற்றிபெற முடியாதவைகளாகவும் இருக்கலாம். ஆனாலும் கடவுள் பற்றி பேசுவதை அல்லது உரையாடுவதை மனிதர்களாகிய நாம் நிறுத்திவிடமுடியாது. இறை இருப்பை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் மனிதர்கள் அனைவரும் ஏதோ ஒரு விதத்தில் கடவுளைப்பற்றி பேசுகின்றார்கள் அல்லது உரையாடுகிறார்கள். இறை இருப்பில் நம்பிக்கை உடையவர்கள் தங்கள் நம்பிக்கையை வெளிப்படுத்த உரையாடுவார்கள். இறை இருப்பை ஏற்காதவர்கள் கடவுள் இல்லை என வாதாட உரையாடுவார்கள். எனவே கடவுள் பற்றிய உரையாடல்கள் மனித சமூகத்திலே தவிர்க்க முடியாதவைகளாகியுள்ளன.

"நாங்கள் சரியாகப் பேச முடியாதவைகளை மௌனத்தில் கடந்து செல்ல விடவேண்டும்". இது பிரபல பகுப்பாய்வு மெய்யியலாளர் விற்கென்ஸ்ரைனின் பொன்மொழியாகும். கடவுள் பற்றிய உரையாடல்கள் அனைத்திற்கும் இப் பொன்மொழி வழிகாட்டியாக அமையும்.

விற்கென்ஸ்ரைனின் இப் பொன்மொழி பேச்சுச் சுதந்திரத்தின் தணிக்கையல்ல மாறாக மனித வார்த்தைகளின் நிறைவற்ற தன்மையை எச்சரிக்கின்ற, மனித வார்த்தைகள் பற்றிய மட்டுத்திட்டத்தை பேண அழைக்கின்ற ஒரு விதந்துரைப்பாகும்.

கடவுள் பற்றிய உரையாடல்களில் துடுக்குத்தனம் தவிர்க்கப்பட வேண்டியது. உரையாடுபவரை, அவரது கடவுள் பற்றிய மன மதிப்பீடுகளை உள்ளடக்கியதாகவே கடவுள் பற்றிய உரையாடல் அமைய வேண்டும். கடவுள் பற்றி உரையாடுபவர் ஏற்பதற்கோ அல்லது நிராகரிப்பதற்கோ, தனது தனிப்பட்ட மன உறுதிப்பாட்டில் இருந்து உரையாடுவாராயின் அது அர்த்தமுள்ள கடவுள் பற்றிய உரையாடலாக அமையும். இவர்களே உண்மையானவர்கள். கடவுள் என்கின்ற பொழுது ஒருவர் தனக்கு அப்பாற்பட்ட ஒன்றையே கருதுகிறார். ஆனாலும் அவர், கடவுள் என்கின்ற பொழுது தன்னைப்பற்றியும் சிலவற்றைச் சொல்கிறார். ஏனென்றால் கடவுள் என்கின்ற கருத்து முன்னர் சொல்லப்பட்டது போல யாவரதும் நிஜ வாழ்வை பாதிப்பதொன்றாகும். ஆகவே இறை இருப்பை ஏற்கின்ற அல்லது நிராகரிக்கின்றவர்களின் கடவுள் பற்றிய உரையாடல்கள் அவர்களின் மன உறுதிப்பாடுகளில் இருந்து எழுந்தால் அவைகள் அவர்களது மனித ஆளுமையை வெளிப்படுத்தும்.

கடவுள் என்பது பல நுற்றாண்டுகள் பழமைவாய்ந்த ஒரு பிரச்சினையாகும். இது சமயங்களினுடைய அல்லது திருச்சபைகளினுடைய அல்லது இறையியலினுடைய அல்லது மெய்யியலினுடைய 'பாடுபொருள்' மட்டுமல்ல. மாறாக அனைத்து மனித கண்ணோட்டங்களினதும் உலகப் பார்வைகளினதும் மையக்கருத்தாகும். ஆகவே கடவுள் பற்றிய உரையாடல்கள் பிரபஞ்சம் முழுவதையும் உள்ளடக்கி இருக்கின்றன. விதிவிலக்கற்று அனைவரினதும் இருப்பையும் இவ்வுரையாடல்கள் பாதிக்கின்றன.

இந்த மெய்யியல் நோக்கு இதழில் சில கடவுள் பற்றிய உரையாடல்களில் நாம் ஈடுபட்டுள்ளோம். இஸ்லாமிய 'சூ∴பி' ஞானத்துயில் நோக்கிலும், இந்திய மெய்யியலில் 'சாங்கிய தத்துவத்தின்' அடிப்படையிலும் இறை அனுபவம் பற்றி அலசியுள்ளோம். கிறிஸ்தவ மெய்யியலை அடிப்படையாகக் கொண்டு கடவுளை 'பரம வஸ்துவாக' பார்த்திருக்கிறோம். அதேவேளை கடவுளின் இருப்பை நிராகரிப்பவர்களின் நிலைப்பாட்டிலிருந்தும் கடவுளை நோக்கியுள்ளோம். இவைகள் எல்லாம், கடவுள் என்பது மனித சமூகத்திலும், வரலாற்றிலும் அதிகம் பேசப்படும் மையக்கருத்து எனக்காட்டுகின்ற எமது முயற்சியேயாகும்.

**-யோ. போல் றொகான்**

From the editor…

## God -Talk

Each time we attempt to say something in human words about God or about God's action in the world, we fail. The reality we name God cannot be adequately put into words. All of what we say about God is always too much and not enough: too much, because we cannot grasp the divine reality in words; and not enough, because that reality is always more and transcends whatever is said about it. But even if all our words for God are incompetent and insufficient to define or explain him – and even we know very well that our attempts to define or explain God necessarily do not succeed - we humans cannot stop talking about God. We humans, believers or non-believers, are compelled to speak about God: believers to uphold and non-believers to refute. Thus God-talks become necessary in the human society.

"What we cannot speak about, we must pass over in silence." This well-known advice by Wittgenstein with regard to the use of language is very much applicable to any God-talk. The advice of Wittgenstein is not a ban on speech but an exhortation to utter cautiousness and modesty. We should not be impulsive in any speech about God. Any God-talk becomes meaningful if it involves the subject(the one who speaks), that means, if it comes from the personal conviction of the speaker. When I say "God", I obviously refer to a referent outside of me, but still I say something about myself in such a way that it influences my concrete existence. Therefore a God-talk of either a believer or non-believer, expresses his or her personality.

'God' is the theme and the centuries–old problem that occupies not only religions, churches, philosophies and theologies but also the world views and the entire perspectives of human beings. Therefore any God-talk touches the very existence of the believer or non-believer.

Here in this issue of 'Mei Iyal Nokku' (Philosophical Journal) we have involved in some God-Talk. We have seen the experience of God in Sufism and Hinduism. We have also tried to see this God from the viewpoint of Christian philosophy as the Necessary Being. We have also seen God from the viewpoint of a non-believer. We try to see God as the one who is talked much in human society and history.

**-J. Paul Rohan**

*

# இருப்பின் இருப்பிடம்

அ. ஜெ. அ. ஜெயறஞ்சன்

இவ் அகிலத்தில் தோன்றி மறைந்தவைகளும் தற்பொழுதுள்ள அனைத்தும், ஏன் எதிர்காலத்தில் தோற்றம் பெற சாத்தியமானவைகளும் மெய்யியலிலே “வஸ்து” (Being) என அழைக்கப்படுகிறது. வஸ்துவை அடிப்படையில் உயிருள்ளவை எனவும் உயிரற்றவை எனவும் நோக்கலாம். உயிருள்ளவை என்னும்போது தாவரங்கள், விலங்குகள் சிந்தனா சக்தி உடையவைகள் என பிரித்துப் பார்க்கலாம். தாவரங்கள் தன்னகத்தே வளரும் தன்மையையும் இனப்பெருக்கம் செய்யும் ஆற்றலையும், இயல்பூக்கத்தினையும், உணர்ந்து கொள்ளும் தன்மையையும் கொண்டுள்ளன. இவற்றுடன் விலங்குகள் விசேட இயல்பாகிய இடப்பெயர்ச்சி கொள்ளும் தன்மையைக் கொண்டுள்ளன. மேற்கூறப்பட்ட பண்புகளுடன் மனிதன் விசேட பண்பாகிய சிந்தனை செய்யும் ஆற்றலைக் கொண்டுள்ளான். மொத்தத்தில் சொல்லப்போனால் எவை எவை இருப்புத் தன்மை என்னும் பண்பை கொண்டிருக்கின்றனவோ அது அறிவியல் நிலையானாலும் சரி, உண்மை நிலையானாலும் சரி அவை எல்லாம் “வஸ்து” எனப்படும்.

காலத்திற்குக் காலம் பல சிந்தனையாளர்கள் இந்த வஸ்துவின் இருப்புத் தன்மை பற்றி பல விதமான வினாக்களை எழுப்பினார்கள், எழுப்பிக் கொண்டும் இருக்கிறார்கள். அதாவது இந்த வஸ்து தனது இருப்புத் தன்மையை எங்கிருந்து பெற்றது? இதன் இயல்பு என்ன? இது எவ்வாறு தோற்றம் பெற்றது? போன்ற வினாக்கள் பிரபல சிந்தனையாளர்களான பார்மினிடஸ், கெராகிளிர்றஸ், பிளேற்றோ, அரிஸ்டோட்டில், அகஸ்ரின், அன்சலம், தோமஸ் அக்குவினஸ் போன்றோரால் ஆராயப்பட்டன. பொதுவாக எல்லா சிந்தனையாளர்களும் இருப்புத் தன்மை கொண்ட இவ்வுலகில் காணப்படும் பொருட்கள் மட்டும் “வஸ்து” என விளங்கிக் கொண்டனர். இவ்வுலகின் அசைவுகள் அனைத்திற்கும் பிரதான, அசையாத இயக்கி (Prime, unmoved mover) ஒன்று உண்டு என்பது அரிஸ்டோட்டிலின் கருத்து. ஆனால் கிறீஸ்தவ சிந்தனையாளரான தோமஸ் அக்குவீனஸ் ஒருபடி மேற் சென்று இவ் வஸ்துவை கடவுள் என விளக்கினார். அவர் இவ்வுலகிலே காணப்படுகின்ற பொருட்கள் “வஸ்து” எனவும் கடவுள் “பரம வஸ்து” எனவும் விளக்குகின்றார்.

**வஸ்து (Contingent being)**

இது இவ்வுலகிலே தோன்றுவதற்குரிய இயல்பையும் தோன்றாமல் இருப்பதற்குமான இயல்பையும் தன்னகத்தே கொண்டு விளங்குவதோடு தனது இருப்புத்தன்மைக்காக பிறிதொரு வஸ்துவிலே தங்கி நிற்கவேண்டிய குணாதிசயத்தையும் கொண்டுள்ளது. இவ்வகையான வஸ்துக்களின் வெற்றிடத்தை மற்றொரு வஸ்துவின் துணைகொண்டு

நிறைவுசெய்து விடலாம். இதன் இயக்கம் (Motion) பற்றி சிந்திக்கின்றபோது இவை தாமாகவே இயங்கமுடியாமையால் பிறிதொரு வஸ்துவின் உதவியுடன் மட்டுமே இயங்க முடியும்.

நாம் காணுகின்ற இவ்வகையான வஸ்துக்கள் பல சேர்க்கைகளால் (Composition) உருவாகி இருப்பதனால் இவை வரையறைக்கு உட்பட்டவை. இவற்றிற்கு தொடக்கமும் முடிவும் உண்டு. மாற்றத்திற்கு உட்பட கூடியவை. நிரந்தரமற்றவை. தோமஸ் அக்குவீனசின் காரண வாதத்தின்படி (Causal argument) இவ்வகையான வஸ்துக்கள் எல்லாம் காரியங்கள் (Effects). இக் காரியங்கள் எல்லாம் அவற்றின் இருப்புத் தன்மைக்கான காரணத்தை (cause) நோக்கியே இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஏனெனில் காரணம் இல்லாமல் காரியம் இருக்க முடியாது.

நான் மேலே சொன்னது போல உணர்விற்கு உட்பட்ட பொருட்கள் மட்டுமல்ல, உணர்விற்கு அப்பாற்பட்டு அறிவியல் நிலையிலேயே நிற்கின்ற கருத்துக்களும் (Ideas) வஸ்துக்களாகக் கருதப்படுகின்றன. அவை யதார்த்த உலகிலே அல்லாமல் கருத்துலகிலே மட்டுமே இருப்புத் தன்மையை பெற்றுள்ளன. இத்தகைய வஸ்துக்கள் இரண்டு வழிமுறைகளிலே பெறப்படுகின்றன.

1. நாம் எமது அறிவு தரக்கூடிய சக்தியினால் (Abstractive power of the mind) பல பொருட்களில் இருந்து அவற்றில் காணப்படும் ஒரு சாராம்சத்தை மட்டும் எடுத்து ஒரு கருத்தை உருவாக்குகின்றோம்.
2. இவ்வாறு அறிவிலே உருவாக்கப்பட்ட கருத்தை வைத்துக்கொண்டு யதார்த்தமாக இருப்புத் தன்மை கொண்ட வஸ்துவினை பார்க்கின்ற போது நாம் வைத்திருக்கின்ற கருத்தும் அப்பொருளும் ஒருங்கிசைவாகுமேயானால் இந்த வஸ்துதான் நாம் வைத்திருக்கின்ற கருத்து என்ற முடிவிற்கு வருகின்றோம். அதாவது பிரயோகித்துப் பார்க்கும் ஆற்றலினால் (Applicable power of the mind) நாம் மேற்கொள்ளும் முடிவாகும். எது எப்படி இருப்பினும் இவ்வகையான வஸ்துக்கள் எல்லாம் அழியக்கூடிய நிரந்தரமற்ற, நிச்சயமற்ற வஸ்துக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## பரம வஸ்து (Necessary Being)

"பரம வஸ்து" ஆனது வஸ்துவைப்போல் அல்லாது கட்டாயமாக இருக்க வேண்டிய இயல்பைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்த பரம வஸ்து இல்லாமல் மனித வஸ்துவுட்பட எந்தவொரு வஸ்துவையும் பற்றி நாம் பேச முடியாது. ஏனெனில் எல்லாவித வஸ்துக்களின் இருப்புத் தன்மைக்கும் இந்த பரம வஸ்துவே காரணமாக இருக்கிறது. அந்த

மாபெரும் உண்மையை கிறீஸ்தவ சிந்தனையாளரான தோமஸ் அக்குவீனஸ், அன்சலம் போன்றோர் நிறுவமுயன்றுள்ளனர். தோமஸ் அக்குவீனஸ் ஐந்து வழிமுறைகளிலே பரம வஸ்துவின் இருப்புத் தன்மையையும் வஸ்துவின் தங்கியிருக்கும் இயல்பையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

**முதல்வழி:-** இவ்வுலகம் சடப்பொருட்களால் ஆனவை, இச்சடப்பொருட்கள் தானாக இயங்கமுடியாதவை. இவற்றின் இயக்கத்திற்கு வெளியே இருந்து ஒரு சக்தி தேவைப்படுகிறது என்பது நாம் அறிந்த உண்மை. அந்த வெளிச் சக்தியும் இன்னொன்றிலே தங்கியிருக்கும் இயல்பு கொண்டது என்றால், அச்சக்தி உண்மையில் அதனுடையது என்று கூறமுடியாது. எனவே தங்கியிருக்கும் இயல்பு இல்லாத ஒரு பொருளில் இருந்து வரும் சக்திதான் உண்மையில் ஒரு பொருளை இயக்க முடியும். அந்த சக்தியே "பரம வஸ்து" என்பது இவரின் வாதம்.

**இரண்டாம் வழி:-** இவ்வுலகிலே ஒரு தொடரான சீரான அமைப்பு ஒன்று உண்டு, அதாவது வஸ்துக்களின் தோற்றத்திற்கு காரணமான ஒரு தொடர்ச்சியான முகவர் உண்டு. அந்த தொடரான சங்கிலிக்கு காரணமான முகவர் பரம வஸ்து என விளக்குகின்றார்.

**மூன்றாம் வழி:-** இது தங்கியிருப்புத் தன்மையில் இருந்து விவாதிக்கப்படுகின்றது. இதன்படி எல்லாம் தோன்றவோ அன்றேல் தோன்றாமல் இருக்கவோ கூடிய தன்மையுள்ள வஸ்துக்களாக இருந்தால் (Contingent beings) இன்று ஒரு பொருளுமே இருக்க முடியாது. ஆனால் இங்கு கோடிக்கணக்கான வஸ்துகள் உண்டு. எனவே ஆரம்பத்திலே ஏதோ ஒரு வஸ்து அவசியமாக இருந்திருக்க வேண்டும். அந்த வஸ்து பரம வஸ்து எனப்படுகிறது.

**நான்காம் வழி:-** உலகிலே வாழும் மனிதர்களாகிய நாம் அன்பு, நீதி, மகிழ்வு, அழகு, உண்மை ஆகிய சில முழுமைகளை அனுபவிக்கின்றோம். ஆனால் இவை பல்வேறு அளவுகளிலே காணப்படுவதனால் உண்மையிலே இவற்றை முழுமை எனக் கூற முடியாது. இவை வரையறை கொண்ட பகுதிகள். எனவே "பகுதி" என்று ஒன்று இருந்தால் அதற்கான முழுமை ஒன்று வேண்டும் என்பது வெளிப்படை. அவ் முழுமையே பரம வஸ்து எனப்படுகின்றது.

**ஐந்தாம் வழி:-** நாம் காணுகின்ற இயற்கையான பொருட்கள் அறிவு, ஞானம் அற்றவை. ஆனால் ஏதோ ஒரு நோக்கத்திற்காக இயங்கி அந்த நோக்கத்தை நிறைவு செய்து கொண்டுள்ளன.

**உ-ம்:-** வானம் மழை பொழிவதனால் பயிர் செழித்து பலன் கொடுக்கின்றது. ஆகவே இந்த அறிவற்ற பொருட்கள் சரியான

முறையில் இயங்குவதற்கு அறிவுள்ள ஒரு வஸ்து திரைமறைவில் நின்று செயற்படுகின்றது. அதுவே பரம வஸ்து என கூறுகின்றார்.

இவ்வாறாக மனித புத்திக்கு விளங்கக்கூடிய வகையிலே பரம வஸ்துவின் இருப்பையும் அந்த இருப்பிலே தங்கியிருக்கின்ற மனித வஸ்துவின் இருப்பையும் தன்னுடைய வாதத்தினால் தோமஸ் அக்குவீனஸ் தெளிவுறச் செய்கின்றார்.

மேலும் அன்சலம் தனது வாதத்திலே வஸ்துக்களின் இருப்பிடம் பரம வஸ்து என உறுதிப்படுத்துகின்றார். அவரது வாதத்தின்படி வஸ்துவினுடைய வெளிப்பாடே கருத்து. இந்தக் கருத்தையும் வஸ்துவினையும் ஒன்றிலிருந்து வேறொன்றாக பிரிக்க முடியாது. அவ்வாறே பரம வஸ்துபற்றிய கருத்தையும் அதன் இருப்புத் தன்மையையும் வேறாக்க முடியாது. எனவே பரம வஸ்து பற்றிய ஒரு கருத்து இருந்தால் அக்கருத்து யதார்த்தமாக இருப்புத் தன்மையை கொண்டிருக்க வேண்டும். இவ்வுலகில் பரம வஸ்து பற்றிய கருத்து உள்ளது எனவே பரம வஸ்து கருத்து நிலைக்கு வெளியே இருப்புத் தன்மையை கொண்டுள்ளது.

இந்த பரம வஸ்து பல முழுமையான இயற்கைக்கு அப்பாற்பட்ட குணாதிசயங்களைக் கொண்டுள்ளது. இது ஒருமைத் தன்மையையும் (one) உண்மை நிலையையும் (True) என்றுமே நல்லதான தன்மையையும் (Good) அம்சமான நிலையையும் (Beautiful) கொண்டுள்ளது.

## வஸ்துவின் கட்டமைப்பு (Structure of being)

வஸ்துவானது பல உள்ளடக்கங்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அவை முழுமையடைந்த தன்மை (act), முழுமையடையக்கூடிய தன்மை (Potency), உள்த்தன்மை (Essence), வெளித்தோற்றம் (Existence), தானாக நிற்கக்கூடிய தன்மை (Substance), தங்கி நிற்க வேண்டிய தன்மை (accident), பொருள் (matter), அமைப்பு (form) என்பனவாகும்.

வஸ்துவினைப் பொறுத்தவரையில் முழுமையடைந்த தன்மையும் முழுமையடையக்கூடிய தன்மையும் உண்டு. ஆனால் பரம வஸ்துவில் முழுமையடைந்த தன்மை மட்டுமே (pure act) உண்டு. அதற்கு மேலும் வளரும் தன்மை கிடையாது. வஸ்துவிலே உள்த்தன்மைக்கும் வெளித்தோற்றத்திற்குமிடையே இடைவெளி உண்டு. பரம வஸ்துவிலே இவ்விரு தன்மைக்கும் இடையே வேறுபாடு இல்லை. இரண்டும் ஒன்றே. வஸ்து தானாகத் தங்கியிராமல் மற்றைய பொருளிலே தங்கியிருக்கும் பண்பைக் கொண்டுள்ளபோது, பரம வஸ்து தானாகத் தோன்றி தனித்து நிற்கும் குணாதிசயத்தைக் கொண்டுள்ளது.

இவ்வாறாக வஸ்துவும் பரம வஸ்துவும் "வஸ்து" என்ற ரீதியிலே ஒன்றுபோல் தென்பட்டாலும் இவை இரண்டிற்கும் இடையே பாரிய வித்தியாசம் காணப்படுகிறது. அதாவது இவை இரண்டும் மலையும் மடுவும் போன்றன. எது எப்படி இருப்பினும் வஸ்துவின் இருப்புத் தன்மை பரம வஸ்துவிலேதான் தங்கியுள்ளது. இந்த பரம வஸ்து இல்லாமல் வஸ்துவின் இருப்புத் தன்மை பற்றி பேசமுடியாது. இப் பரம வஸ்துவின் திட்டத்தின்படி எல்லா வஸ்துக்களும் இறுதியிலே அதனிடம் போய்ச் சேரவேண்டும். ஏனெனில் தமிழிலே ஒரு முதுமொழி உண்டு.

"படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக
மனுவைப்படைத்தான் தன்னை வணங்க"

எனவே இவ் வஸ்துக்கள் இறுதியிலே பரம வஸ்துவின் இருப்பிலே பங்குகொள்ள வேண்டும்.

"குருடன் ஒளியினைக் காணாவிடினும் சூரியன் தொடர்ந்து ஒளி தருகிறது"
- இராபர்ட் சவுத்பெல்

"இந்த நேரத்தில் என்ன செய்ய வேண்டும் என நாம் அறிந்தால் இந்த நேரம் எல்லா நேரத்தைப் போல் மிகவும் நல்ல நேரம்"
- ரால்ப் எமேர்சன்

எதையும் நன்றாக ஆராய்ச்சி செய்து,
காலத்திற்கும், அவசியத்திற்கும்
தக்க வண்ணம் தள்ளுவன தள்ளி,
கூட்டுவன கூட்டித் திருத்தம் செய்ய வேண்டியது
மனிதனின் கடமையாகும். அதுவே பகுத்தறிவாகும்
ஈ.வெ. ராமசாமி
(பெரியார்)

தன்னிடம் ஒளியைத் தக்கவைத்துக் கொள்ளாத தீபம்
பிறதீபங்களை ஒளிர்விக்க இயலாது.
- தாகூர்

# நவீனயுகமும் இறைமறுப்புக் கொள்கையும்

-அ. அன்ரன் ஸ்ரீபன்

**அறிமுகம்**

மனித வரலாற்றிலே இறைவனின் இருப்பைப் பற்றியும் மதங்களின் கொள்கைகள் பற்றியும் பல்வேறு வடிவங்களில் பல்வேறு காலங்களில் பல்வேறு கேள்விகள் எழுந்தவண்ணம் இருக்கின்றன. மூன்றாம் மிலேனியத்தில் காலடி வைத்து இருக்கும் தற்கால மானிட வரலாற்றிலே இக்கேள்விகள் புதிய பரிணாமத்தோடு மனிதனின் விசுவாச வாழ்விற்கு பெரும் சவாலாக அமைந்து வருகின்றன.

கற்கால மனிதன் இறைவனின் இருப்பை இயற்கையினூடாக கண்டுணர்ந்தான். இயற்கையில் உள்ள தனக்கு அப்பாற்பட்ட சக்திகளை வணங்கினான். இவ்வாறு இயற்கையை வழிபட்ட மனிதன் நாளடைவில் வளர்ச்சியடைந்து பல தெய்வங்கள் உள்ளன என்ற நிலைக்கு வந்தான். இவ்வாறு பல தெய்வங்களை வழிபட்ட மனிதன், இறைவன் ஒருவன் என்ற நிலைக்கு வந்தான். இருந்தும் மனித சிந்தனையின் வளர்ச்சியானது இத்துடன் அவனை நிற்கவிடவில்லை. இதற்கு அப்பால் சென்று விசுவாச வாழ்வையே ஆட்டம்காண வைத்தது. இதன் விளைவாக விசுவாச வாழ்விற்கும், காரண காரியங்களைத் தேடும் அவனின் சிந்தனைக்கும் இடையே முரண்பாடுகள் எழுந்தன. இதன் பயனாக இறைவனின் இருப்பை நிராகரிக்க வேண்டிய கட்டாயத்திற்கு சிந்திக்க மனிதன் தள்ளப்பட்டான்.

இன்றைய நவீனயுகத்திலே இறைமறுப்புக் கொள்கைகள் ஒரு சாதாரண நிகழ்வாக எமது சமுதாயத்திலே முளைவிடுவதை நாம் காணலாம். அதற்கான காரணத்தை நாம் நோக்குவோம்.

## 1) மானிடவாதமும் இறைமறுப்புக் கொள்கையும்

மனிதனின் இருப்புக்கு புதிய அர்த்தங்களைக் கொடுத்து, அவனின் மாண்பை உயர்த்துவதற்கு, இறைவன் ஒரு தடையாக இருப்பதை உணர்ந்த சிந்தனையாளன் இறைவன் இல்லை என்ற ஒரு கருத்தை முன்வைத்தான்.

புராதன காலத்திலே சிந்தனையாளரின் கருத்துப்படி அனைத்திற்கும் மையமாக மனிதனே காணப்பட்டான். மத்திய காலப் பகுதியில் கிறிஸ்தவ மதத்தின் துரிதமான வளர்ச்சி மனிதனின் சிந்தனையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இதன் பயனாக அனைத்திற்கும் மையமாக மனிதனல்ல மாறாக இறைவனே இருக்கின்றார் என்ற சிந்தனை மேலோங்கியது. இவ்வாறு வெவ்வேறு காலப்பகுதிகளில் கடவுள் மையக் கோட்பாட்டிற்கும் மனிதமையக் கோட்பாட்டிற்குமிடையே ஓர்

இழுபறிநிலை காணப்பட்டது. இந்த இழுபறி நிலையில், மனிதமையக் கோட்பாட்டிற்கு முக்கியாத்துவம் கொடுத்து ஏற்றுக்கொள்ளும் போது இறைமையக் கோட்பாடு நிராகரிக்கப்படவேண்டியது இன்றியமையாதது ஒன்றாகக் காணப்பட்டது. ஒருவகையில் மானிட வாதமானது இறை மறுப்புக் கொள்கைக்கு அடித்தளமிடுவதாகவே காணப்படுகின்றது.

## 2) இறைவனின் இருப்பைப்பற்றிய நேரடியான தடயங்கள் எதுவும் இல்லாமை.

விசுவாசமே இறை அனுபவத்தை பெறுவதற்கு முக்கியமானதொன்றாகக் கருதப்படுகின்றது. காரண காரியங்களைத் தேடும் மனித சிந்தனையானது முழுமையாக மனித அறிவில் தங்கியிருப்பதால் இறை அனுபவத்தைப் பெற தவறிவிடுகின்றது. கடவுள் இவ்வுலகில் இருக்கின்றார் என்பதை உறுதிப்படுத்துவதற்கு கண்ணால் பார்க்கக்கூடிய, பகுத்தறிவு சார்ந்த எந்தவிதமான தடயங்களும் இல்லாத நிலையில் மனித சிந்தனையானது இறைவனை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றது. இறைவனை யாரும் கண்ணால் காணவில்லை.

இறை அனுபவம் தனிப்பட்ட ஒரு மனிதனுடைய விசுவாச வாழ்விலே அனுபவிக்கப்படுகின்றது. நவீன கால மனிதன் எல்லாவற்றையும் ஒரு பொதுவான கண்ணோட்டத்தில் பார்ப்பதால் தனிப்பட்ட இறை அனுபவம் அவனால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகக் காணப்படுகின்றது. இன்னும் சமய நம்பிக்கைகள் காரண காரியங்களைத் தேடும் மனித சிந்தனைக்கு மேலும் குழப்பத்தை ஏற்படுத்துவதால் நவீன கால மனிதன் இவைகள் எல்லாவற்றையும் நிராகரிக்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டான்.

## 3) மனித விடுதலையும் இறைமறுப்புக் கொள்கையும்

19ம் நூற்றாண்டின் இறுதிக்காலப் பகுதியில் உலகின் பல்வேறு பகுதிகளில் மனிதனை அடக்கி ஒடுக்க, அவனை ஒரு பாவனைப் பொருளாக பாவிப்பதற்கு பயன்படுத்தும் ஒரு கருவியாக சமயக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டன.

நிலப்பிரபுக்களும், அரசியல்வாதிகளும் ஏழை மக்களை அடக்கி ஒடுக்கி தங்களின் வாழ்வுக்கு நன்மைகளைத் தேடிக்கொள்வதற்கு சமயங்களை ஆயுதங்களாகவும் பயன்படுத்தினார்கள். சில சமயக் கொள்கைகளின் படி ஒரு மனிதனுடைய எதிர்காலம் இறைவனாலேயே நிர்ணயிக்கப்படுவதுடன் அவனின் எதிர்காலமும் அவனின் பிறப்புடன் முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்டுவிட்டது என்றும் கூறுகின்றன. இக் கூற்றுக்கள் முதலாளி வர்க்கத்தினர் தொழிலாளர்களையும் ஏழைகளையும் மேலும்மேலும் அடக்கி ஒடுக்குவதற்கு உதவிபுரிந்தன.

சிந்தனையாளர் கால் மாக்ஸ் இவைகளை சாடுவதுடன் ஒருமனிதனுடைய எதிர்காலம் அவனுடைய கைகளிலேயே தங்கியிருக்கின்றன என்றும், அவனின் உழைப்பே அவனின் வாழ்வை

நிர்ணயிக்கின்றது . என்றும் கூறுகின்றார். எனவே மனிதனை முதலாளிவர்க்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்து அவனது வாழ்வை இவ்வுலகில் ஒரு பொருள் நிறைந்ததாக மாற்றுவதற்கு சமயக் கொள்கைகளும், கடவுள் நம்பிக்கையும் தடையாக இருந்தன. ஆகவே கடவுள் நம்பிக்கையையும் சமயக் கொள்கைகளையும் மனிதனின் வாழ்க்கையில் இருந்து பிரிக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

## 4) இறைமறுப்பு, நவீன உலகின் ஒரு போக்கு

மனிதசமுதாயம் ஒரு புதிய மிலேனியத்தினுள் காலடி எடுத்து வைத்த இவ்வேளையிலே, விஞ்ஞானத்தினதும் தொழில்நுட்ப வளர்ச்சியினதும் துணையுடன் மனிதன் பல சாதனைகளை நிகழ்த்தி இவ்வுலகில் தன்னால் முடியாதது எதுவுமே இல்லை என்ற நிலைக்கு வந்துவிட்டான்.

சமயமும் விஞ்ஞானமும் மனித சிந்தனையின் இருபெரும் பிரிவுகள். ஆனால் விஞ்ஞானத்தின் துரித வளர்ச்சி சமய நம்பிக்கைகளை சமுதாயத்தில் படிப்படியாக மங்கச்செய்துகொண்டு இருக்கிறது. விஞ்ஞானம் உலக காரியங்களை மையப்படுத்துகின்றது. அதேவேளை சமயம் ஆன்மீக காரியங்களைப்பற்றிப் பேசுகின்றது. விஞ்ஞானத்தினதும், தொழில்நுட்பத்தினதும் துரித வளர்ச்சியானது மனித வாழ்வை முழுமையாக உலக பொருட்களிலும் உலக காரியங்களிலும் தங்கியிருககச் செய்துவிட்டது. இதன் விளைவாக ஆன்மீக காரியங்களில் மனிதனுக்கு இருந்த நாட்டம் படிப்படியாகக் குறைந்துவிட, இறுதியில் தனது ஆன்மீக வாழ்வையும் அதன் மையமாகிய இறைவனையும் கைவிடவேண்டிய நிலை உருவாகியது.

இது இவ்வாறிருக்க, மனிதன் தனது நாளாந்த வாழ்க்கையிலே பலவேதனைகளையும் சோதனைகளையும் சவால்களையும் அன்றாடம் சந்தித்துக்கொண்டிருக்கிறான். இவைகள் மனித வாழ்விற்கு பொரும் சுமைகளாக அமைந்துவிட்டன. இச் சந்தர்ப்பத்தில் மனித சிந்தனையிலே பல எண்ணங்கள் தோன்றி அவனைச் சிந்திக்க வைத்தன. கடவுள் நல்லவர், நன்மையையே நாடுபவர். ஆனால் மனிதன் நாளாந்தம் பல தீமைகளை இவ்வுலகில் காண்கின்றான். நல்லவரான கடவுள் இவ்வுலகில் இருந்தால் தீமைகள் எவ்வாறு இவ்வுலகில் இருக்கலாம். ஆகவே தீமைகள் நிறைந்த இவ்வுலகில் கடவுள் இல்லை என்ற முடிவுக்கு வந்தான்.

இவ்வாறு இறைவனின் இருப்பை மறுக்கும் கொள்கையானது திடீரென தோற்றம் பெற்றதொன்றல்ல. மாறாக இது வரலாற்றினூடாகத் தோன்றி, பல பரிணாமங்களைப் பெற்று, தற்போது ஒரு பெரும் சவாலாக மாறிவிட்ட ஒன்றாக காணப்படுகின்றது.

***இறைமறுப்புக் கொள்கை பற்றிய, திருச்சபையின் நோக்கு***

இறைவனின் இருப்பை மறுக்கும் கொள்கையானது திருச்சபைக்கு ஒரு பெரும் சவாலாக மாறியது. திருச்சபையின் கருத்துப்படி மனிதனின்

மாண்பு இறைவனிலேதான் அதன் முழுமையை அடைகின்றது. இறப்பின் பின்பு நிகழும் மறுவாழ்வு பற்றிய எதிர்பார்ப்பு இவ்வுலக வாழ்விற்கு ஒரு தடையாக இருப்பதாக கருதமுடியாது. மாறாக இவ் எதிர்பார்ப்பு ஒரு புது அர்த்தத்தை இவ்வுலக வாழ்வில் ஏற்படுத்துகின்றது.

திருச்சபை இறைமறுப்புக் கொள்கையை எதிர்க்கின்றது. ஆனால் இறைமறுப்புக் கொள்கையுடையவர்களை திருச்சபை வெறுக்கவில்லை. விசுவாசிகளையும் இறைவனின் இருப்பை மறுப்பவர்களையும் ஒருமித்த உள்ளத்துடன் இவ்வுலகில் சிறந்த ஒழுங்குகளை நிலைநாட்ட ஒன்றுபட்டு உழைக்க அழைப்பு விடுக்கின்றது. திருச்சபை இறைவிசுவாசிகள், இறைமறுப்புக் கொள்கையைக் கடைப்பிடிப்பவர்கள் என்பவர்களிடையே பாகுபாடு காட்டும் எந்த செயற்பாட்டையும் வன்மையாகக் கண்டிக்கின்றது. அத்துடன் ஒரு முன்சார்பெண்ணமற்ற மனநிலையுடன் இவ்வுலகின் உண்மைத் தன்மைகளை கண்டுணர இறைமறுப்புக்கொள்கை உடையவர்களுக்கு சிறந்த முறையிலே ஒரு அழைப்பைத் திருச்சபை விடுத்துநிற்கின்றது.

### *கடவுள் நம்பிக்கையும் மனித சிந்தனையும்...*

இன்றைய நவீன யுகத்திலே எவ்வாறு இறைவனின் இருப்பை மறுக்கும் கொள்கையானது ஒரு சாதாரண நிகழ்வாக மாறிவிட்டது என்பதை இதுவரை நாம் பார்த்தோம். எது எவ்வாறிருந்தாலும் இவற்றிலிருந்து நாம் ஒரு முடிவுக்கு வரலாம். நவீன உலகில் வாழும் மனிதன் அனைத்து நிகழ்வுகளையும் தனது அறிவுக்கு உட்படுத்தி விளங்கிக்கொள்ள முயல்கின்றான். அனைத்தும் மனிதனின் விளக்கத்திற்கு உட்பட்டதாக இருக்கவேண்டும் என விரும்புகின்றான். இந்த ஒரு மனநிலையுடனேயே மனிதன் இறைவனின் இருப்பையும் தனது விளக்கத்திற்கு உட்படுத்த முயல்கின்றான். கடவுள் மனித சிந்தனைக்கு உட்பட்டவர் அல்ல, அவர் அனைத்தையம் கடந்தவர். மனித சிந்தனைக்கு அப்பாற்பட்டவர். ஆகவே காரண காரியங்களைத் தேடும் மனித சிந்தனையினால் கடவுள் இருப்பை பரிசோதித்துப் பார்க்க முடியாதுள்ளது. இச்சந்தர்ப்பத்திலே அனைத்தும் தனது சிந்தனைக்கு உடபட்டதாகவே இருக்கவேண்டும் என விரும்பும் நவீன மனிதன், கடவுளின் இருப்பைத் தனது அறிவால் பரிசோதித்து அறியமுடியாத நிலையில், அவரின் இருப்பை மறுக்க முற்படுகின்றான். இதன் விளைவாக , கடவுள் எனக்கூறுவது ஒரு பொய்யான மாயை என்ற முடிவுக்கு வருகின்றான்.

சாதாரணமாக இறைமறுப்புக் கொள்கை உடையவர்களை இரண்டு பிரிவாக வகுக்கலாம்.

1. அமைப்புமுறையில், அல்லது கொள்கையளவில் இறைவனின் இருப்பை மறுப்பவர்கள்
2. நடைமுறைவாழ்வில் தமது செயற்பாட்டளவில் இறைவனின் இருப்பை மறுப்பவர்கள்

அமைப்புமுறை சார்ந்த இறைமறுப்புக் கொள்கை உடையவர்கள் மனித அறிவை ஒரு முக்கிய கருவியாக கொண்டு அதன் துணையுடன் இறைவனின் இருப்பை முற்றுமுழுதாக மறுப்பவர்கள். நடைமுறை வாழ்வில் இறைமறுப்பு கொள்கை உடையவர்களும் அவ்வாறே செய்கிறார்கள் ஆனால் அவர்கள் கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் நடைமுறை வாழ்விற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இவை இரண்டிலும் நடைமுறை வாழ்வை மையமாக வைத்த இறைமறுப்பே ஒரு சாதாரண நிகழ்வாக காணப்படுகின்றது. ஓர் அமைப்பு முறையிலோ அல்லது கொள்கையளவிலோ இறைவனின் இருப்பை ஏற்றுக்கொள்பவர்களும் கூட தங்களின் நடைமுறை வாழ்வில் இறைவனின் இருப்பை மறுப்பவர்களாக காணப்படலாம்.

கடவுளின் இருப்பை ஒருவன் தனது வாழ்விலே கண்டுணர்ந்து அனுபவிக்க அவனது விசுவாசமே அவனுக்கு துணையாக இருக்கின்றது. ஒருபோதும் நாம் எமது அறிவினாலே மட்டும்கடவுளை அனுபவிக்க முடியாது. எமது காரண காரியங்களைத் தேடும் சிந்தனையானது நாம் எமது விசுவாச வாழ்விலே எம்மை மேலும்மேலும் ஆழப்படுத்த உதவிபுரிகின்றது.

இறையியலும் மெய்யியலும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை, ஒருவகையில் நாம் இறைவனைப்பற்றி விளங்கிக்கொள்ள மெய்யியல் எமக்கு துணையாக இருக்கின்றது. மனிதன் தனது சிந்தனையினாலே இறைவனின் இருப்பை முற்றுமுழுதாக நிராகரிக்கமுடியாது. காரணம் இறைவன் அனைத்தையும் கடந்தவர். அத்துடன் மனித சிந்தனையானது ஒரு வரையறைக்கு உட்பட்டது. ஆகவே நாம் எமது அறிவை பயன்படுத்தி எல்லாவற்றையும் கடந்த, எங்கும் நிறைந்திருப்பவராக இறைவனின் இருப்பை மறுக்க முடியாது.

**“எந்த அபிப்பிராயத்தையும் அதனால் ஏற்படும் பலனைக் கொண்டுதான் மதிக்க வேண்டுமே தவிர, வார்த்தை இனிப்பைக்கொண்டும், செல்வாக்கைக்கொண்டும் மதிப்பது அறிவுடைமை ஆகாது.”**

**ஈ. வெ. ராமசாமி**
**(பெரியார்)**

**“நமது எதார்த்த நிலையே நாம் காணும் பொருட்களில் பிரதிபலிக்கின்றது”**

**- காம் வின்சன்**

# சாங்கிய மெய்யியலில் - யதார்த்தம்
# Reality According to Sankhya Philosophy

பி. தே. யூட்தாஸ்

**அறிமுகம்:**

பல்வேறு மெய்யியல் பாரம்பரியங்களின் தொட்டிலாக விளங்குவது இந்திய மண் ஆகும். இந்திய மண்ணில் தோன்றிய மெய்யியல் பாரம்பரியங்களுள் சாங்கிய மெய்யியல் பாரம்பரியம் சிறப்பானதாகும். "சாங்கிய" என்பதன் பொருள் "இலக்கம்" அல்லது "கணக்கிடுதல்" என்பதாகும். காலப்போக்கில் "தூய அறிவு" என்ற பொருளையும் இப்பதம் குறித்து நின்றது. கபில என்பவரே இப்பாரம்பரியத்தின் தோற்றுவிப்பாளர் என வரலாறு கூறுகின்றது. கபில எழுதிய சாங்கிய சூத்திரம் என்னும் நூலே இவ்வமைப்பின் முதல் நூலாகக் கருதப்படுகிறது.

மிகவும் நுணுக்கமாக ஆராயுமிடத்து இம் மெய்யியல் சிந்தனை நாத்திகத் தன்மை கொண்டதாகக் காணப்படுகிறது. இரண்டு முக்கியமான யதார்த்தங்கள் பற்றி இங்கு பேசப்படுகிறது: பிரக்ருதி (prime matter), புருஷ (self). உலகத்தின் இருப்பானது கூர்ப்பு வடிவில் விபரிக்கப்படுகிறது. பிரக்ருதி புருஷவோடு உறவு கொள்வதனாலேயே கூர்ப்பு நிகழ்கின்றது. அனைத்து ஆற்றல்வளமும் புருஷவிடமும் பிரக்ருதியிடமுமே இருக்கின்றது. ஒன்றுமில்லாமையில் இருந்து எதுவும் உருவாக முடியாது. விளைவு அல்லது பலன் முன்பே மூலத்தில் இருக்கின்றது. இதனையே சத்கார்ய வாதம் என்ற பதம் குறித்து நிற்கின்றது.

## இரண்டு யதார்த்தங்களையும் தனித்தனியே ஆராய்வோம்.

### 1) பிரக்ருதி

சாங்கிய மெய்யியல் பிரக்ருதியை சடப்பொருள் சார்ந்ததாகவும், புருஷவை சடப்பொருள் சாராததாகவும் விபரிக்கிறது. பிறவ்வல்னர் (Frauwallner) என்ற அறிஞர் பிரக்ருதியை அடிப்படையான சடப்பொருளாக (Ur-matter) இனம் காண்கின்றார். அனைத்துப் பரிமாணங்களிற்கும் அடிப்படையாக இது இருக்கின்றது. இப் பிரக்ருதி ஒருமைத்தன்மை வாய்ந்தது, நிலையானது, சடத்துவமானது. இது பெண்பாலாக வர்ணிக்கப்படுகிறது.

சத்வ, றயஸ், தமஸ் ஆகிய மூன்று குணங்களையும் இது உள்ளடக்கியுள்ளது. மூன்று குணங்களும் சமநிலையில் காணப்படும். ஒன்றைவிட்டு மற்றையது தனித்து இயங்க வலுவற்றது. மூன்றும் அத்தியவசியமானதாகும். மனித புலன்களால் இவற்றை அறிந்து கொள்ள முடியாது. மாறாக இக்குணங்களின் பயன்களான இவ்வுலகப்

பொருட்களில் இருந்து இவற்றை நாம் அறிந்து கொள்ளலாம். அனைத்து படைப்புக்களும் இம் மூன்று குணங்களையும் கொண்டிருக்கின்றன. உலகின் பல்நிலைசார் கொள்கைக்கு அடிப்படை இக்குணங்களே ஆகும்.

ஒரு பொருளில் ஒரு குணம் மேலோங்கி இருக்கும் போது மற்றைய இரண்டும் அதற்கு துணையாக இருக்கும். உலகப்படைப்பு வேளையில் இம்மூன்றும் குழப்பமடைந்து, மாற்றமடைந்து கூர்ப்பு நிகழ்ந்தது. இக்குணங்கள் இரண்டு வகையான மாற்றத்திற்கு உள்ளாகின்றன.

1. ஸ்வருப பரிணாம (Svarupa parinama)
2. விருப பரிணாம (Virupa parinama)

ஸ்வருப பரிணாம வேளையில் மூன்றும் ஒன்றாகச் செயற்படமாட்டாது. மாறாக தனித்து தமக்குள்ளே மாற்றமடையும். விருப பரிணாமத்தில் ஒன்று மற்றைய இரண்டையும் விட மேலோங்கிக் காணப்படும். இம் மாற்றமே உலகக் கூர்ப்பின் ஆரம்பமாகும். மூன்றும் ஒன்றாகச் செயற்படுவதால் பிரித்து நோக்கமுடியாது.

## 2) புருஷ (Purusha)

சாதாரணமாக புருஷ என்று ஓர் ஆணையே கருதுகிறோம். மெய்யியல் பொருளில் புருஷ என்பது ஆன்மாவை, ஆவியைக் குறித்து நிற்கின்றது. வேத இலக்கியக் கருத்துப்படி புருஷ மேலான இருப்பை சுட்டிக்காட்டுகின்றது. சாங்கிய மெய்யியல் பாரம்பரியத்தில் இப்பதம் ஆவி சார்ந்ததாகும். இங்கு புருஷ அனைத்தையும் கட்டுப்படுத்தும் ஆவி சார்ந்த பொருளாகிலும், செயற்பாடு அற்றதாகக் காணப்படுகிறது. இது சடப்பொருள் உலகின் செயற்பாடுகளால் பாதிக்கப்படாத ஒரு இருப்பே ஆகும். மிகவும் உயர்வாக நோக்குமிடத்து புருஷ ஆனது முடிவற்ற, மற்றையவரால் இயக்கப்படாத, தன்னியல்பிலேயே இயக்கமற்ற, உலக ஆவி, ஏக ஆவி, உலகை நெறிப்படுத்தும் ஒரு கருப்பொருள் ஆகும்.

### 2.1. புருஷவின் இருப்பை நியாயப்படுத்தும் வாதங்கள்

1. உலகில் அனைத்து சீவராசிகளும், பொருட்களும் மற்றையதன் நலனுக்காகவே படைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக உடல் ஆன்மாவால் பாவிக்கப்படுவதற்காக படைக்கப்பட்டுள்ளது.

2. பொருட்கள் குணங்களை உள்ளடக்கியிருப்பதால் தன்னிலை உணர்வு அவற்றுள் இருக்க வேண்டும்.

3. சடப்பொருட்களை கட்டுப்படுத்தி நெறிப்படுத்துவதற்கு ஒருவர் இருக்க வேண்டும். அப்போது தான் அவை தமது குறிக்கோளை, முடிவை அடையும்.

4. பிரக்ருதி ஓர் உணர்வாக இருப்பதால், பிரக்ருதியையும் அதன் உற்பத்திகளையும் அனுபவிக்க ஒருவர் இருக்க வேண்டும்.

5. எங்கும் சுதந்திரத்திற்கான, விடுதலைக்கான போராட்டத்தை நாம் அனுபவிக்கின்றோம். சடப்பொருள் உலகம் இவ் வகையான சுதந்திரத்தையும், விடுதலையையும் கொடுக்க இயலாததாகக் காணப்படுகிறது. எனவே ஏதோ ஒன்று இதை வழங்கக் கூடியதாக இருக்கவேண்டும்.

**3) "ஆள்" இன் பன்மைநிலை (Multiplicity)**

புருஷ ஒருமையானதா அல்லது பன்மையானதா என்பது கேள்விக்குரியதாகும். எமது வாழ்வின் நிலைகளில் இருந்து இப்பன்மை நிலையை நாம் அறிந்து கொள்ளலாம். மனிதன் பல்வேறு ஒழுக்கவியல், அறிவியல், உடலியல்க் காரணிகளைக் கொண்டவனாகக் காணப்படுகின்றான். சாங்கிய பாரம்பரியம் பன்நிலைக்கு பின்வருமாறு காரணம் கூறுகிறது.

1. பல ஆள்கள் காணப்படுகின்றனர். ஓர் ஆள் மாத்திரம் இருப்பாராயின் ஒரு மனிதனின் பிறப்பும் இறப்பும் முழுமனுக்குலத்திற்குமான பிறப்பு, இறப்பாக மாறும்.

2. ஓர் "ஆள்" ஆயின் அதன் செயற்பாடு மற்றைய அனைத்தின் செயற்பாடாக அமையும்.

3. ஓர் "ஆள்" ஆயின் கடவுளுக்கும், மனிதனுக்கும், விலங்குகளிற்கும் வித்தியாசமே இருக்காது.


புருஷவானது, பிரக்ருதியினதும் அதன் உற்பத்திப் பொருட்களினதும் வலையில் சிக்குண்டு இருக்கின்றது. இந்நிலையில் இருந்து விடுபட வேண்டிய தேவை இருக்கிறது. புருஷ தனது உண்மை நிலையை அடைய வேண்டுமாயின் இவ்வுலகக் கட்டிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளவேண்டும். இவ்வுலகப் பொருட்கள் அனைத்தும் பிரக்ருதிக்கே உரியது, என்ற உண்மை நிலையை உணர்ந்து தன்னை விடுவித்துக் கொள்கின்ற போதுதான் புருஷ தனது முடிவை எய்தமுடியும். விடுதலை கிடைத்த பிற்பாடு மீள்பிறப்புகள் இருக்கமுடியாது.

**4) பிரக்ருதியில் இருந்து உலகின் கூர்ப்பு**

பிரக்ருதியும் புருஷவும் இணைகின்ற போதுதான் கூர்ப்பு நிகழ்கின்றது. இரண்டும் தனித்து நிற்குமாயின் கூர்ப்பு நிகழாது. பிரக்ருதியானது புருஷவின் அறிவால் நெறிப்படுத்தப்படுகிறது. இவ்வாறான நெறிப்படுத்தல் இருக்கின்ற போதுதான் கூர்ப்பு நிகழும். இவ்விரண்டும் ஒரு காட்டிலே தனித்து விடப்பட்ட குருடனுக்கும் முடவனுக்கும் ஒப்பிடப்படுகிறது.

காட்டைவிட்டு வெளியே வரவேண்டுமாயின் இருவரும் ஒருவருக்கொருவர் உதவி செய்தே ஆகவேண்டும். பிரக்ருதியின் இனங்காணலுக்கு புருஷ தேவைப்படுகிறது. அவ்வாறே புருஷவின் விடுதலைக்கு பிரக்ருதி அவசியமாகிறது. முன்பு குறிப்பிடப்பட்டது போன்று விருப பரிணாம நிலையிலேயே கூர்ப்பு நடைபெறுகிறது. குணங்கள் பிரிக்க முடியாதவை. ஒரு குணம் என்றுமே மேலோங்கிக் காணப்படும் தன்மை வாய்ந்தது. இவ்வாறு மேலோங்கிக் காணப்படும் குணமே ஒரு பொருளின் தன்மையை நிர்ணயிக்கின்றது. பிரக்ருதியானது அனைத்துப் பொருட்களின் ஆற்றல்வளத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

**கூர்ப்பானது பின்வருமாறு நிகழ்கின்றது:**




**<u>மகத் / புத்தி:</u>** கூர்ப்புப் படிமுறையின் முதலாவது வெளியீடாக மகத் விளங்குகிறது. மனித அறிவிற்கு அடிப்படையான காரணியாக இது இருக்கிறது. உளவியற் கண்ணோட்டத்தில் இதனைப் புத்தி எனக் கொள்வர். தீர்மானித்தலும் பகுத்து நோக்கலும் புத்தியின் தொழிற்பாடுகளாகும். சத்வ என்ற குணம் மேலோங்குவதாலேயே இது நிகழுகின்றது.

**<u>அகங்கார:</u>** கூர்ப்புப் படிமுறையின் இரண்டாவது வெளியீடாக விளங்குவது அகங்கார ஆகும். இந்நிலையே பொருட்களிற்கு தனித்துவத்தைக் கொடுக்கின்றது. விளைவுகளில் இருந்து அகங்காரவின் இருப்பை அறிந்து கொள்ளலாம். இதன் உளவியல் தொழிற்பாடாக சுயஅன்பு விளங்குகிறது. பிரக்ருதியின் தொழிற்பாடுகளோடு இனம் காண்பதற்கு புருஷவிற்கு அகங்கார உதவுகிறது. சத்வ என்ற குணத்தால் அகங்கார ஆட்சி செய்யப்படும் போது மனிதன் நல்லதைச் செய்கிறான். ரயஸ் என்ற குணத்தால் அகங்கார ஆட்சி செய்யப்படும்

போது மனிதன் தீமையைச் செய்கிறான். தமஸ் என்ற குணத்தால் அகங்கார ஆட்சி செய்யப்படும் போது மனிதன் நன்மையும் தீமையும் இல்லாத செயல்களைச் செய்கிறான். சாங்கிய பாரம்பரியத்தின்படி அகங்காரவிலிருந்து பதினொரு காரணிகள் வெளிப்பீடாகப் பெறப்படுகின்றன: அவையாவன மனம், ஐம்புலன்கள், ஐந்து செயற்பாட்டு உறுப்புகள் ஆகும்.

**மனம்:** செயலையும் அறிவையும் இணைப்பதற்கு மனம் பயன்படுகிறது. மனத்தின் நெறிப்படுத்தல் இன்றி மற்றைய உறுப்புகள் செயற்பட முடியாது. புலன்களை கதவுகளாக உருவகப்படுத்தும் போது மனமானது கதவுக்காப்பாளனாக உருவகிக்கப்படுகிறது.

**ஞானஇந்திரியங்கள்:** பார்த்தல், கேட்டல், நுகர்தல், சுவைத்தல், தொடுதல் ஆகிய ஐம்புலன்களும் ஞானஇந்திரியங்களாகும். புலன்களின் தேவையைப் பொறுத்து இவற்றின் தொழிற்பாடுகள் அமைகின்றன. அகங்காரவில் இருந்து இவை தோன்றுவதால் இவை முடிவைக்கொண்டவை ஆகும். ஒவ்வோர் புலனும் தனக்கே உரிய சிறப்பான தொழிற்பாட்டை செய்கின்றது.

**கருமஇந்திரியங்கள்:** நாக்கு, பாதம், கைகள், குதம், இனவிருத்தி உறுப்பு ஆகியன கரும இந்திரியங்கள் ஆகும். இவற்றின் தொழிற்பாடுகள் முறையே பேச்சு, நகர்வு, பற்றல், கழித்தல், இனவிருத்தி என்பனவாகும். இவை அனைத்தும் சக்திகளாகக் காணப்படுகிறது.

**தன்மாத்திரங்கள்:** ஒன்றுக்குள் ஆற்றல்வளத்தில் இருக்கும் காரணிகளை தன்மாத்திரங்கள் என்பர். உதாரணமாக சத்தம், சுவை, தொடுகை, நிறம், மணம் என்பவற்றைக் குறிக்கலாம். சாதாரணமனிதரால் பார்க்க முடியாதவை ஆனால் யோகிகளால் காணக்கூடியவை.

**மகாபூதங்கள்:** தன்மாத்திரங்களில் இருந்து பெறப்படுபவை மகாபூதங்கள் ஆகும். அவையாவன ஆகாயம், வாயு, நெருப்பு, நீர், உலகம் என்பனவாகும்.

**முடிவாக:**

ஒன்றுமில்லாமையில் இருந்து யாதும் வந்துவிடாது. எனவே ஏதோ ஒன்றிலிருந்து தான் ஏதாவது தோன்ற முடியும். சாங்கிய மெய்யியல் பாரம்பரியத்தைப் பொறுத்தவரை பிரக்ருதியே அனைத்திற்கும் அடிப்படையாக இருக்கிறது. பிரக்ருதியில் இருந்தே அனைத்தும் உருவாகிறது. பிரக்ருதி புருஷவோடு தொடர்பு கொள்ளும் போது கூர்ப்பு முறை மூலம் பொருட்கள் உருவாகின்றன. இப் பாரம்பரியமானது இரண்டு காரணிகளை அடிப்படையாக வைத்து அனைத்திற்கும் விளக்கம் கொடுக்க முற்படுவதை நாம் அவதானிக்கலாம். அத்தோடு ஒன்றோடு ஒன்று இணைந்து செயற்படும் தன்மையும் சிறப்பாக விபரிக்கப்படுகிறது.

# மௌனம் தேடி

- சூ. டக்ளஸ் மில்ரன் லோகு


சிந்தனைகள் சிறகடிக்க
கருத்துக்கள் கருவெடுக்க
மௌனம் தேடி
பயணம் தொடர்கிறேன்

எங்கும் இரைச்சல்
எதிலும் இரைச்சல்
மௌனத்தின் மேன்மை
மரணத்தின் பிடியில்



கருவிலே கதவு திறந்து
கல்லறை வரை
ஒப்பாரியாய் உடன்வரும்
சத்தங்கள்.... சத்தங்கள்....


வீடுதொடங்கி நாடுவரை
பள்ளியறை தொடங்கி பாராளுமன்றம் வரை
பாரமாய் அழுத்தும்
கூச்சல்கள்.... கூச்சல்கள்




குடும்பப்பேச்சு கூடிப்போச்சு
வீட்டுச்சுவர் துளைத்து
வீதி உலா வரும்
வார்த்தைப் பிரயோகம்
வாடிக்கையாச்சு

பேசும் இயந்திரமாய்
தேடித்தேடி வெட்டிப்பேச்சு
பேசும் வீணரின் வீக்கம்
ஊர்ச்சந்தி தெருக்கோடியில்


மேடையில் முழங்கும் அரசியல் பேச்சு
வாக்குறுதியை வாரியிறைத்து
காற்று மௌனத்தை
காயப்படுத்திது





பண்டிகை எல்லாம்
பக்தியைத் தொலைத்து
“குய்யோ முய்யோ” சத்தத்தால்
குழறுபடியாச்சு

செவியறை சிதைக்க
அதிர்வுகள் தாங்கிய
அதிரடி ஒலி/ஒளித்தட்டு
அதிகமாய் பரவலாச்சு



காலனின் கயிற்றால்
களவாடப்பட்டதோ?
மௌனம்...... தேடி
பயணம் தொடர்கிறேன்....

# இஸ்லாமிய மறை மெய்ஞானத்தில் இறை அனுபவம்
## (God – experience in Sufism)

கை. பீ. கனிசியஸ் றாஜ்

**முன்னுரை:**

இஸ்லாமிய மறை மெய்ஞான போக்கானது முகமது நபியின் இஸ்லாமியக் கோட்பாட்டில் இருந்து உருவெடுத்துள்ளது. இஸ்லாமியக் கோட்பாடுகள் மக்களை சட்டதிட்டங்களுக்குள் கட்டுப்படுத்துபவையாக அமைகின்றன. இஸ்லாமிய மக்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட சட்டதிட்டங்களை கைக்கொண்டால் போதுமானது என்ற சிந்தனையில் வளர்க்கப்பட்டார்கள். இதன் விளைவாக இறை அனுபவமற்ற, மேலோட்டமான வழிபாட்டு, தொழுகை முறைகளைக் கடைப்பிடித்து வந்தார்கள். இத்தகைய வழிபாட்டு முறைகள் இஸ்லாமிய மறை மெஞ்ஞானத் தேடலுக்கு வழி அமைத்தது. இக் கோட்பாட்டில் மக்கள் இறை அன்பையும், அறிவையும் இறைவனுடனான நேரடி அனுபவத்தினூடாக தேடினார்கள். இவர்கள் சட்டங்களில் இலயித்துவிடாது அதிலும் மேலாக இறைவனை நேரடியாக கண்டுகொள்ள முயற்சித்தார்கள். இவ்வாறான ஒரு பாங்கிலேயே கிறிஸ்தவ மதமும் உருவெடுத்தது. இறைவன் மோயீசன் ஊடாக கொடுத்த சட்டங்களை கடைப்பிடித்தால் மட்டும் போதுமானது என்னும் நோக்குடன், சட்டங்களின் உண்மைத் தன்மையை மறந்து வாழ்ந்த யூத மக்களுக்கு இயேசு பகைவனானார். ஏனெனில் சட்டங்களால் பிழைப்பு நடத்திய யூத தலைவர்களுக்கு எதிராக இயேசு புதிய சட்டங்களை வாழ்ந்து காட்டியதுடன், வாழவும் அழைப்பு விடுத்தார். இதன் வெளிப்பாடாக கிறிஸ்தவம் பிறந்தது. இந்த வகையிலேயே மறை மெஞ்ஞானக் கோட்பாட்டின் தோற்றமும் அமைகின்றது.

## இஸ்லாமிய மறை மெஞ்ஞானக் கோட்பாடு (Sufism)

இந்த மறை மெஞ்ஞானக் கோட்பாடானது "தசாவூவ்" (tasawwuf) என்னும் சொற்பதத்தினால் அழைக்கப்பட்டு வந்தது. ஆனால் இது 19ம் நூற்றாண்டிலேயே மேற்கத்தைய அறிஞர்களால் மறை மெஞ்ஞானக் கோட்பாடு (Sufism) என்னும் சொல் பதத்தைப் பெற்றது. Sufism (மறை மெஞ்ஞானம்) என்னும் இச் சொல்லானது அராபிய மொழியில் இருந்து உருப்பெறுகின்றது.

இக் கோட்பாட்டை நோக்குகையில், இதனூடாக மக்கள் இறைவனைப் பற்றிய உண்மைகளையும், இறைவனின் அன்பையும், இறை அறிவையும் பல்வேறு நிலைகளில் தேடுகிறார்கள். இந்தத் தேடுதலின் ஊடாக இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான உறவையும், இறை அன்பின் தன்மையையும், உலகின் ஞானத்தையும் கண்டடைய முற்படுகிறார்கள். இக் கோட்பாட்டின் மையக் கருவாக, நோக்கமாக அமைவது:

"கடவுள் மட்டுமே அவர் ஒருவரே" என்பதாகும். எழுத்தாளர் யூனாட் குறிப்பிடுகையில்;

கடவுள் ஒருவராகவும், செயற்படுபவராகவும் காணப்படுகிறார்.

"நான்" என்று சொல்லும் அதிகாரமும், உரிமையும் அவருக்கே உண்டு. இக்கோட்பாட்டுச் சிந்தனை இஸ்லாமிய உலகத்தையும், மற்றும் ஏனைய பகுதிகளையும் பாதித்தது. சிறப்பாக இந்தியாவைக் குறிப்பிடலாம். ஏனெனில் இந்தியாவில் பெரும்பான்மையானவர்களால் கைக்கொள்ளப்பட்டு வந்த இந்து மதத்தில் இறை ஒருமைவாதக் கொள்கை காணப்பட்டது. இதனால் இக்கோட்பாடு மிக விரைவாக பரவ வாய்ப்பு ஏற்பட்டது. இக் கோட்பாட்டின் விளைவாக இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான வேறுபாடு அற்றுப் போகின்றது. ஏனெனில் மனிதன் இறைவனில் ஒன்றித்து இறைநிலையை அடைகின்றான். இதனால் அவன் இறைவன் ஆகின்றான்.

**இக் கோட்பாட்டின் சிந்தனைகளும் செயற்பாடுகளும்**

இக் கோட்பாட்டில் இறைவனை அடைவதற்கு பல்வேறு வழிகளில் தமது சிந்தனைகளையும், செயற்பாடுகளையும் இக்கோட்பாட்டாளர்கள் கையாளுகின்றனர். ஆரம்பத்தில் இவர்கள் சில உண்மைகளை நம்புகின்றார்கள். இறைவனின் இறுதித் தீர்ப்பு உண்டு என்றும், அது தமது வாழ்க்கையின் செயற்பாடுகளுக்கு ஏற்றவிதமாக அமையும் என்று நம்புகிறார்கள். இறைவன் அவர்களை அன்பு செய்கின்றார் என்றும், அவர்கள் இறைவனை அன்பு செய்கிறார்கள் என்றும் அன்பு இறைநிலைப் பண்பை எடுத்துக் காட்டுகிறார்கள். சமய சட்ட திட்டங்களைக் கடைப்பிடிப்பதுடன், இறைவாக்கினர்களின் வாழ்வை பின்பற்றுதல் போன்றன இறை நிலையில் கலக்க, ஒன்றிக்க வழிகாட்டுகின்றன என நம்பினார்கள்.

இக்கோட்பாட்டைக் கையாளுபவர்கள் தாங்கள் இறைவனை நெருங்கிச் சென்று அவருடன் ஒன்றிக்க வேண்டும் என்றே விரும்புவார்கள். எனவே அவர்கள் இந்நிலையை அடைவதற்கு தங்களது சுயநலக் கொள்கைகள் சிந்தனைகளைத் தூய்மையாக்கிக்கொள்ள வேண்டும். இத்தகைய ஒரு உள, உடல் தூய்மைக்கு அவர்கள் பல துன்பங்களை அனுபவிக்க முற்படுவார்கள். தங்களது வாழ்நாளில் கூடுதலான நேரத்தை தியானிப்பதிலும், தங்கள் புலன்களை அடக்கி உட்புறக் காட்சித் தியானங்களை செய்வதிலும் செலவிடுவார்கள். அதுமட்டுமல்லாது மனம் சிந்தனை சார்ந்த துன்பங்களையும் ( Mental sufferings) அவர்கள் அனுபவிப்பார்கள். இத்தகைய செயற்பாடுகளால் அவர்கள் சிந்தனைகளும் செயற்பாடுகளும் சுத்திகரிக்கப்பட்டு இறைவனுடன் ஒன்றாகும் நிலையை பெறுகின்றார்கள். மேலும் தங்களது உணவை கட்டுப்படுத்தி தமது உடலை வருத்துவதன் மூலமாக இறைவனை நெருங்கிச் செல்லலாம் என்று நம்புகிறார்கள்.

இக்கோட்பாட்டாளர்கள் புனிதர்களின் வணக்கத்தில் நம்பிக்கை கொண்டு வாழ்ந்தார்கள். அதுமட்டுமல்லாது, இறந்தவர்களின் கல்லறைகளைத் தரிசித்தார்கள். இதனூடாக இறந்தவர்களின் வாழ்க்கை முறைகளை மீட்டுப் பார்த்து தமது வாழ்க்கையை அமைத்துக்கொண்டார்கள்.

முடிவாக

இவ்வாறாக இவர்கள் புனிதர்களின் வாழ்க்கை முறைகளைப் பின்பற்றி, தம்முடைய வாழ்வையும், அவர்களை நோக்கியதாக அமைக்கின்றார்கள். இதனூடாக அவர்கள் துன்பங்கள் கஸ்ரங்களை தமதாக்கி இறைவனை நெருங்கிச் செல்லுகின்றோம் என உணர்கிறார்கள். உடலும் ஆன்மாவும் தூய்மைப்படுத்தப்பட்டவர்களாக இறைவனை அடையும் போது புனிதர்களாக மாறுவதுடன் அவரது நண்பர்களாக மாறுகின்றார்கள். இந்நிலை, இறைவனும் மனிதனும் ஒன்றிக்கின்ற ஒருமை வாதத்தை குறிப்பிடுகின்றது. இதுவே இக்கோட்பாட்டின் இலக்காக அமைகிறது. இறைவனின் அன்புத் தீயில் ஒன்றாகி அவரிலே வாழ்வதையே இக்கோட்பாட்டாளர்கள் தமது இறை அனுபவமாக கொண்டுள்ளார்கள்.

"வாழ்வின் முதன்மையானது அழைப்பை கண்டு கொள்வதே"

—பாஸ்கல்

"ஆர்வம் இன்றி சாதனை இல்லை"

—எமர்சன்

"வெற்றி அழகானது ஆனால் அதன் விலையோ அதிகம்"

—பௌலர்ஸ்

"விசுவாசம் ஒரு பறவை அது விடியலுக்கு முன் இருளாக இருக்கும் போதே பாடுகிறது"

—இரவீந்திரநாத் தாகூர்

"சட்டங்கள் ஆடை போன்றவை அவை மக்களுக்கு ஏற்றதாக அமைய வேண்டும். சட்டங்கள் மக்களுக்காகவே"

—கிளானர்சு டாரோ

# ரேனே டெக்காட் (1596 - 1650)

(Rene Descartas)

ஆ. மைக் மயூரன்



ரேனே டெக்காட் பிரான்சில் உள்ள ருறைன் (Touraine) என்ற இடத்தில் 1596ம் ஆண்டு பங்குனி மாதம் 31ம் திகதி பிறந்தார். இவருடைய பெற்றோர் உயர்ந்த செல்வந்த வர்க்கத்தைச் சார்ந்தவர்கள். இவர்களின் சொத்து இவர் வாழும் காலம் மட்டும் போதுமானதாக இருந்தது. இவர் தனது 8வது வயதில் ஐரோப்பாவிலுள்ள லாப்லெச் (Lafleche) என்ற இடத்திலுள்ள இயேசு சபைக் குருக்களால் நடத்தப்பட்ட கல்லூரியில் இணைந்து அளவையியல், மெய்யியல், எண்கணிதம் போன்ற பாடங்களை ஆர்வமுடன் கற்றுவந்தார். இவருக்குத் தான் அறிவிலே வளரவேண்டும் என்ற ஆர்வம் சிறுபராயம் முதலே இருந்துவந்தது. பல பாடங்களில் தனது திறமைகளை வெளிப்படுத்தினாலும், அன்றைய காலத்தில் இருந்த வழமையான கல்விமுறை அவருக்கு திருப்தியளித்ததாக இருக்கவில்லை. ஆகவே டெக்காட் "உலகின் மிகப்பெரிய புத்தகம்" என்ற ஒன்றிற்காக தனது முயற்சியை செலவிடத் தீர்மானித்தார். இந்நிலையில் 1618ல் இராணுவத்தில் இணைவதற்கான அழைப்பு ஒறேஞ் (orange) என்னும் இடத்தின் இளவரசன் மயூறைஸ் (Maurice) இடமிருந்து வந்தது. அந்த அழைப்பை ஏற்ற அவர் முப்பது வருடங்கள் ஒல்லாந்து, ஜேர்மனி, இத்தாலி, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் பணியாற்றியும், யாத்திரைகள், பயணங்கள் என்பன மேற்கொண்டும் சிறந்த கத்தோலிக்க விசுவாசியாகவும், கல்விமானாகவும் திகழ்ந்தார்.

இவர் தனது பரந்து விரிந்த அறிவினால் மிகப்பெரிய பங்கை உறுப்பியல், விலங்கியல், எண்கணிதம், கணிதம் மற்றும் மெய்யியல் போன்ற துறைகள் வளம்பெற ஆற்றியுள்ளார். அவரது சமகாலத்தவரான கலிலியோ, அவரது மெய்யியல் சிந்தனைகளுக்காகக் கொலையுண்டதினால் டெக்காட் துணிவுடன் தனது மெய்யியல் சிந்தனைகளை வெளியிடவில்லை. இருந்தும், இவர் அனைத்தையும் சந்தேகித்தார். இதில் தனது இருப்பைகூட சந்தேகிக்கத் தவறவில்லை. எவ்வளவிற்கு டெக்காட் சந்தேகித்தாரோ அதைவிட மேலாக இவர் சிந்திக்கும் திறனில் வளர்ந்தார். "நான் சிந்திக்கின்றேன் ஆகவே நான் இருக்கின்றேன்" (Cogito ergo sum) என்பது அவரது மெய்யியல் சிந்தனையாக விளங்கிற்று. இவரது சந்தேகத்துடனான தேடல் கடவுளின் இருப்பை உறுதி செய்வதாக அமைந்தது. மனிதனின் இந்த சந்தேகத்துடனான சிந்திக்கும் திறன் ஒரு பொருளின் உண்மைத் தன்மையை அறிவதற்கும், மற்றையவற்றில் இருந்து வேறுபடுத்தி அறிவதற்கும் பேருதவியாக அமைகின்றது என்று தனது மெய்யியல் சிந்தனையின் அடிப்படையைக் கூறினார்.

இவர் ஒரு இயந்திரவியலாளராகவும் இருந்தார். இவரது சீடர்களும் இவரும், மனிதனும் விலங்குகளும் ஒருவகையான இயந்திர வாழ்க்கையினுள் செயலப்படுகின்றன என்றும், மனித ஆன்மா மட்டும் இதில் விதிவிலக்காக அமைகின்றது என்றும் கூறினர். இவரது இத்தகைய மெய்யியல் சிந்தனைகளினால் இவர் இன்றைய மெய்யியலாளர்களால் நவீன பகுத்தறிவு வாதத்தின் தந்தை என அழைக்கப்படுகின்றார். பெரும் கல்விமானாகவும், மெய்யியலாளராகவும் திகழ்ந்த இவர் சுவீடன் நாட்டு அரசி கிறிஸ்டினாவின் அழைப்பை ஏற்று அதிகாலை வேளையில் கற்பிப்பதற்காகச் சென்ற பொழுது, கடுங்குளிரை இவரது உடல் தாங்கக் கூடியதாக இல்லாததால் பரிதாபமாக 1650இல் உயிரிழந்தார்.

**நவீன மெய்யியலின் தந்தை என அழைக்கப்படும் மெய்யியலாளர் றேனே டெக்காட்டைப் பற்றிய குறிப்பினை இவ்விதழ் தாங்கி வருகின்றது. இனிவரும் இதழ்கள் ஒவ்வொன்றும் மெய்யியலாளரைப் பற்றிய குறிப்புக்களுடன் உங்களைச் சந்திக்க இருக்கின்றன. (ஆ-ர்)**

## மெய்யியல் நோக்கு - ஐப்பசி, 2002 இதழ் பற்றி

மெய்யியல் நோக்கு ஐப்பசி 2002 "உலகம் உன்கையில்" என்ற அழகிய தலைப்போடு பல்வேறு விதமான ஆக்கங்களை மனித வாழ்விற்குத் தேவையான அடிப்படைகளை தாங்கிமலர்ந்தது. மெய் + இயல் என்பதற்கேற்ப உண்மையை அறிந்துகொள்ள கடந்த மெய்யியல் நோக்கு சஞ்சிகை உதவியது. மனித வாழ்வில் எதிர்கொள்ளும் அல்லது சந்திக்கும் நிகழ்வுகள் அல்லது பிரச்சினைகளில் அதன் அர்த்தத்தையோ அல்லது பிரச்சனைகளுக்கான காரணத்தையோ அல்லது அவற்றிற்கான தீர்வு முறைகளையோ மனிதன் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அறிந்திருப்பதில்லை. எனவே இத்தகைய சந்தர்ப்பங்களில் மனிதனுக்கு அவற்றைப் புரியவைப்பதற்கு முன்னைய காலங்களில் வெளிவந்த மெய்யியல் நோக்கு இதழ்களும் கடந்த இதழும் சிறப்பாக பங்காற்றியுள்ளது.

எனவே நீண்ட காலங்களுக்குப் பின்பு மீண்டும் மலர்ந்துள்ள இந்த "மெய்யியல் நோக்கு" தொடர்ந்து வெளிவர விரும்புகின்றோம்.

இச் சஞ்சிகையானது வருடத்தில் இரண்டு என்றதோடு மட்டுப்படுத்தாது குறைந்தது காலாண்டுகளுக்கு ஒருமுறையாவது வெளிவர வேண்டும்.

செ. றொபின்சன்

**இனிய வாசகர்களே!**
**இதுபோன்ற உங்கள் கருத்துக்களையும் விமர்சனங்களையும் மெய்யியல் நோக்கு எதிர்பார்த்து நிற்கின்றது. உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்கள் "மெய்யியல் நோக்கின்" வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையட்டும். (ஆ-ர்)**

## GLOSSARY – அரும் பதங்கள்

1. Copla – இணைப்பு
2. Erroneous Knowledge – பிழையுணர்வு
3. Low of identity – முற்றொருமை நியதி
4. Premise minor – துணைப்பொருள் பிரமாணம்
5. Presentative cognition – வழங்கும் காட்சி அறிவு
6. Primary qualities – முதனிலைப் பண்புகள்
7. Principle of contradiction – முரண் தத்துவம்
8. Principle of sufficient reason – போதிய அளவு சிந்தனை
9. Psychology – உள்ளத்தியல்
10. Rationalists – அறிவு வழிக் கொள்கையினர்
11. Representationalism – பிரதிநிதித்துவக் கொள்கை
12. Sceptics – ஐயக் கொள்கையினர்
13. Secondary qualities – வழிநிலைப் பண்புகள்
14. Self – ஆன்மா
15. Self consciousness – ஆன்ம உணர்வு
16. Self disclosure – தன் வெளிப்பாடு
17. Sensations – புலப்பதிவுகள்
18. Sense data – புலன் தரவுகள்
19. Sense perception – புலன் காட்சி
20. Sensible qualities – புலன் பண்புகள்
21. Spiritualism – ஆன்ம முதற் கொள்கை
22. Spiritualistic monism – ஆன்ம ஒருமைக் கொள்கை
23. Spiritualistic pluralism – ஆன்ம பன்மை கொள்கை
24. Spiritual substance – ஆன்மீகப் பொருள்
25. Subjective – அகநிலையுடையது
26. Stimuli – தூண்டுதல்
27. Subjective idealism – அகநிலைக் கருத்துக் கொள்கை
28. Super natural –இயற்கை கடந்தது
29. System – அமைப்பு
30. Systematic – முறைமை
31. System of reality – உள்பொருள் உலகு
32. Tautology – கூறியது கூறல்
33. Telescope – தொலை நோக்கி
34. Temporal priority – காலத்தால் முற்பட்டன
35. Theory – கொள்கை
36. Theory of knowledge – அறிவுக் கொள்கை
37. Thing – in itself – தன்னுண்மை நிலை
38. Thinking – சிந்தனை
39. Three – membered syllogism – முக்கூற்று அளவை முறை
40. Touchstone criterion – உரைகல்
41. Tradition – மரபு
42. Transcendental perception – கடந்த காட்சி
43. Truth – உண்மை
44. Ultimate consciousmess – பரம உணர்வு
45. Ultrasonics – செவிப்புலன் கடந்த ஒலி
46. Ultraviolet – நிறமாலையில் ஊதா கடந்தது
47. Universal judgement – பொதுநிலைத் தீர்ப்புக்கள்
48. Verbal testimony – உரையளவை
49. Verification – சரிபார்த்தல்
50. Yogic perception – யோகஉணர்வு

## You Are, Because He is

A. J. A. Jeyaranjan (Under Graduate)

The world, in which we all live, consists of things which are also called in metaphysical term 'being'. Being can be divided into two: organic and inorganic.
These kinds of beings are known as contingent beings, whose nature is that it may or may not exist. This kind of being may be written with the small letter "b".

There is also another kind of being: the necessary being written with the capital letter "B". Its nature is that it should exist. Thomas Aquinas beautifully explains the necessary and contingent beings in his proofs for the existence of God.

In his first way, he says that nothing moves itself, unless it is moved by something else. That something else is the Supreme Being. In his second way he says that there is no effect without cause. All these realities are effects which call for their causes, and hence the first efficient cause is God. In his third way he explains the necessary Being through a contingent beings. If we are contingent beings, nothing would have existed. Therefore there must be a necessary Being through which all other beings came into existence. The fourth way says that there are perfections like love, happiness, justice, beauty, etc., in the world. But they are not absolute. They are relative perfections. In other words they are parts. For a part there must be a whole. That whole is the Ultimate Being. In the fifth way, he says non-intelligent bodies donot act by themselves. The natural bodies we see, act for a purpose. Therefore it is not the natural bodies which act for themselves but an intelligent one governs and makes them act.

Even though there is a vast difference between necessary Being and contingent being, both are interconnected. We cannot speak of contingent beings without the necessary Being.

Anselm says that the idea of being is included in the Being. Besides, God has a plan that all human beings come back to Him again. The highest Being is the Highest Good for the creatures endowed with intellect and will. Therefore, we the contingent beings have to participate in the Highest Being, termed as God.

## Bibliography

Gardeil, H. D., Introduction to the Philosophy of St. Thomas Aquinas, trans., by John A. Otto, New York: Vail-Ballou Press, 1967.

Bogliolo, L., Metaphysics, trans., by Myroslaw A. Cizdyn, New Delhi: Rekha Printers pvt. Ltd., 1987.

Glenn, P. J., Ontology, New York: Vail-Ballou Press, 1937.

Noonan, J. P., General Metaphysics, U. S. A.: Loyala University Press, 1957.


# The Modern World and the Denial of God

A. Anton Stephen, B.Ph. (Rome)

There have been always debates about God's existence in human history. The denial of God's existence did not sprout all of a sudden in the human history but it is an evolution of human thinking. We find that during the earlier times, there was some sort of denial of God. But now it has become a widespread reality both among the well educated and cultured people. Many reasons can be given for this widespread reality.

Atheism is seen as humanism. To give more emphasis to humanity the denial of God was taken as inevitable. And, there is no direct evidence of God because no one has seen God. Atheism has also seen as liberative movement. Because through out the history we can find various examples where, religions were used as a weapon to exploit the poor. Finally a theism is considered as a fashion or a trend.

The church looks at this great challenge from a different angle and concluded that this is a necessary evil in this world. While the Church rejects atheism it does not hate atheists. The Church calls both believers and unbelievers to work together in order to establish the right order in this world.

However, we have to understand that the existence of God should be experienced by our faith, and not only be demonstrated by our reason. Reason helps us to deepen our faith. Intellectually man cannot disprove the existence of God, because God is beyond reason and the capacity of our reason is very much limited. Therefore with reason alone we cannot deny the existence of God.

## Bibliography

FEUERBACH, Ludwing, The Essence of Christianity, trans, by George Eliot, Harper and Row Publishers, New York, 1957

REESE, William L., Dictionary of Philosophy and Religion; Eastern and Western Thought, Humanities Press, Inc, Atlantic Highlands, New Jersey, 1980.

MICELI, Vincent P., The Gods of Atheism. Roman catholic Books, Harrison, New York, 1971

# Reality According to Sankhya Philosophy

F. T. Judethas. B.Ph. (Rome)

Sankhya is one of the most significant systems of philosophy. It is realistic in epistemology and dualistic in metaphysics. It has two main realities:prakrti (prime matter) and purusa (self). Sankhya tries to explain the existence of the world through a theory of evolution, this evolution takes place when purusa establishes a relationship with prakrti.

According to Sankhya school, prakrti is the material principle while purusa is the spiritual principle. Prakrti possesses three qualities (gunas): namely sattva(tejas), rajas, tamas. The unity of these gunas is held in equilibrium.

In a metaphysical way purusa is represented as "the eternal, uncaused and causeless cosmic spirit, universal soul, the animating principle of the world". One may doubt the existence of purusa. But the Sankhya school gives some proofs for its existence.

The starting point of the evolution of the world is in the contact between purusa and prakrti;there will be no evolution if purusa and prakrti remain isolated from one another. The activity of prakrti must be guided by the intelligence of purusa, if there is to be any evolution of the world.

"Nothing comes from nothing" Therefore, there should be something from which everything comes. For Sankhya, that is prakrti (prime matter): every reality of the world comes from it through the process of evolution, when purusa makes a relationship with prakrti.

## Bibliography

FRAUWALLNER, Erich, History of Indian Philosophy, trans., V.M.Bedekar, 2nd Vol., Motilal banarsidass, Delhi, 1973.

PULIGANDLA, Ramakrishna, Fundamentals of Indian Philosophy, D. K. Print world Ltd., New Delhi, 1997.

RADHAKISHNAN, S., Indian Philosophy, rev.Ed., 2nd Vol., George Allen and Unwin Ltd., New Delhi, 1929, reprinted 1994.

WALKER, Benjamin, Hindu World: An Encyclopedia Survey of Hinduism, 2nd Vol., Munshiram Manoharlal Publishers Pvt. Ltd., New Delhi, 1983.


Mind. not muscle, is the motor of progress, the force which compels and produces wealth.

**- Henry George**

Aim at the sun, and you may not reach it. But your arrow will fly far higher than if aimed at an object on a level with your self.

**-Joel Hawes**

# God Experience in Sufism

G. F. Canisius Raj, B. Ph. (Rome)

Mysticism is that aspect of Islamic belief and practice in which Muslims seek to find the truth of divine love and knowledge through direct personal experience of God. Islamic mysticism is called tasawwuf in Arabic. but it has been called Sufism in Western languages since the early 19th century. In the Quran mystics found the threat of the last judgement, but they also found the statement that God loves them and they love Him which became the basis for love- mysticism. Strict obedience to the religious law and the imitation of the prophets were basis for the mystics. By rigid introspection and mental struggle the mystic tried to purify his baser self form even the smallest signs of selfishness, thus attaining absolute purity of intention and act. Little sleep. little talk, little food were fundamental; fasting became one of the most important preparation for the spiritual life. The central concern of the Sufis is that there is no deity but God. Saint worship is contrary to

Islam which does not admit any mediating role for human beings between man and God, but the cult of living and even more of dead saints-visiting their tombs to take vows there – responded to the feelings of the masses, and thus a number of pre-Islamic customs were absorbed into Islam under the cover of mysticism.

## Bibliography

JACKSON, Paul, S.J., ed., The Muslims of India: Beliefs and Practices, Bangalore, 1988.

SOURDEL, Dominique, Mediaeval Islam, London, 1979.

## **Rene Descartes (1596-1650)**

A. Mac Mayooran (Under Graduate)

He was born in La Haye, a small town in Tourine, France. He was a frail child who acquired the habit of meditating in bed. While attending a Jesuit College, he was permitted to study in bed until noon. He subsequently produced groundbreaking results in science, mathematics and philosophy.

Descartes doubted everything even his existence in the world. Through that he concluded, "cogito ergo sum" (I think therefore I am). He declared that human bodies were machines with the soul, which resided in the pineal gland. He is the father of modern rationalism.

When he accepted an invitation to teach Queen Christina of Sweden, he quickly fell ill in the cold climate and died.

# மெய்யியல் நோக்கு

(வருடம் இருமுறை)

தொகுப்பாசிரியர்: யோ. போல் றொகான், L. Ph. (Rome)

துணையாசிரியர்: சூ. டக்ளஸ் மில்ரன் லோகு, B. A.(Phil.) (Madurai)

விநியோகம்: வெ. எமில் எழில்ராஜ், (இளங்கலை மாணவன்)
ஜெ. அ. ஜெயரஞ்சன், (இளங்கலை மாணவன்)
ஜெ. எல்மோ அருள்நேசன், (இளங்கலை மாணவன்)

ஆலோசகர்: லூயிஸ் பொன்னையா, அ.ம.தி. L. Ph. (Rome)

வெளியீடு, விநியோகம்: மெய்யியல்துறை
சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்.

# MEI - IYAL NOKKU

(Bi - annual)

Editor : J. Paul Rohan, L. Ph. (Rome)

Sub - Editor: S. Douglas Milton Logu, B. A. (Phil.) (Madurai)

Distributors: V. Emil Elilraj, (Under graduate)
J. A. Jeyaranjan, (Under graduate)
J. Elmo Arulnesan (Under graduate)

Consultant: Louis Ponniah, O. M. I. L. Ph. (Rome)

Publishers, Distributors:

Faculty of Philosophy
Xavier's Seminary
Columbuthurai, Jaffna.


**இலச்சினை விளக்கம்:**

எல்லையில்லா அகிலத்தில்,
எல்லையுள்ள உலகினில்,
சிந்திக்கும் மனிதன்
எழுப்பும் கேள்விகள்
எழுத்து வடிவில்

**Our Logo:**

Boundless Universe
Limited World
Reflecting Man
Raising Questions
In Written Form.

**அட்டையில் உள்ள 'மனிதனின் முழுமை'**

– பொதுவானதொரு சிந்தனைக்கு உருவும், வரியும் கொடுத்தவர்
வெ. எமில் எழில்ராஜ்

# மெய்யியல் நோக்கு

அன்புமிக்க வாசகர்களே!

இவ்வெளியீடு பற்றிய உங்கள் கருத்துக்கள், விமர்சனங்களை ஆவலோடு எதிர்பார்க்கின்றோம்.

ஓர் ஆண்டிற்கு இரண்டு இதழ்களாக 'மெய்யியல் நோக்கு' தொடர்ந்தும் வெளிவர உள்ளது.

தனிப்பிரதி ஒன்றின் விலை ரூபா 40.

"அறிவாளிகளுக்கும், பிரபுக்களுக்கும் என்றிருந்த மெய்யியலை வீதிகளுக்கும், பாதையோரங்களுக்கும், சந்தைகளுக்கும் கொண்டு வாருங்கள்."

-சோக்கிரட்டீஸ்

அனைத்துத் தொடர்புகளுக்கும்:

மெய்யியல் நோக்கு<br>
சவேரியார் குருத்துவக்கல்லூரி<br>
கொழும்புத்துறை<br>
யாழ்ப்பாணம்.